








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஶ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 31 13.08.2026



ஸ்ரீமத் க்யாத குரங்க நகரே திஷ்டந் ஸ்வபந் ஸஞ்சரந்,
ஆஸீநச்ச தராதராக்ர விலஸத் தேவஸ்ஸ பூர்ணாஹ்வய:।
தாத்ருங் மந்திர நாயிகாஞ்சந ஸரஸ் தீர்த்தம் சபஞ்சக்ரஹா
க்யாதம் தத்ர விமாந மீசகஜ யோஸ் ஸாக்ஷாத் க்ருத: ப்ராங் முக: ||






ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

## தவிர்க்கப்பட வேண்டியவை

a. நான் என்னும் அஹங்காரம் கொண்டு திரியாமல்.

b. பகையும், அவமரியாதையும், அலட்சியமும், நெருடும் உறவுகளும் கொண்டு வாழாமல்

c. தன்னைப் படைத்த பெருமானை மறந்து, உணவு, உடை, இருப்பிடம், சொத்து, சிற்றின்பம், இவற்றின் பின்னேயே அலையாமல்

d. இந்த ஜன்மமே வாழ்க்கை என நினைத்து, இதற்குள் எல்லா சுகங்களையும் அடைந்து அனுபவித்துவிட வேண்டும் என நினைத்து, எதையும் செய்யாமல்

e. பெருமானை ஸேவித்தாலும் தன் சுய நலன்களையே ப்ரார்த்திக்காமல்

f. பணம் பெரும் செல்வமாக சேர்ந்த பின்னும், அதையே மேலும் மேலும் சேர்க்கப் பாடுபட்டு, குடும்ப சொத்து தகறாறுகளிலும், ஏமாற்று, திருட்டு, இவைகளில் ஈடுபடாமல்

g. என்றும் அழியாத ஆத்மாவை அறியாமல், அழியும் சரீரத்தைப் பற்றியே சிந்தித்து அதைப் பேணுவதிலேயே ஈடுபட்டிருக்காமல்.

h. சிற்றின்பங்களையே சிறந்தனவாக எண்ணி வாழாமல்.

i. நமக்கும் பெருமானுக்குமிடையே உள்ள ஸம்பந்த ஞானமில்லாமல்

j. சகுனி, துர்யோதனனாகவே வாழ்ந்து தன் கர்மத்தின் பலன்களை அனுபவித்துக்கொண்டு ஸம்ஸாரத்தில் உழன்று கொண்டிருக்காமல்.

பரம பாவதர்களாகிய ஆசார்யர்களை அடைந்து மெய் ஞானம் பெற்று, தான் செய்ய வேண்டியது என்ன, தான் விட வேண்டியது என்ன என்பதை உணர்ந்து, விபரீதப் போக்குகளை திருத்திக் கொண்டு நியமங்களோடு வாழ்ந்து, நியமங்களை தர்மமாக நினைத்து அனுஷ்டித்து வாழ வேண்டியதே உண்மை ஜீவாத்ம லக்ஷணம் ஆகும்.

*****************************************************

# நம் குணங்கள் மூன்று.

**ஸத்வ குணம் உடையோர்,**

- பற்றுகளை விலக்கி,
- தங்களுக்கு விதிக்கப்பட்ட செய்து கடமைகளைச்
- நற் பொருள்களை மட்டும் ஏற்று
- பரமாத்மாவான என்னுடைய ஆணைகளாகிய சாஸ்திரங்களை ஏற்று நடந்து,
- பலன் ஏதும் விரும்பாமல், பெருமானின் திருவாராதனம் செய்து
- நல் அறிவோடு தூய வாழ்க்கை வாழ்ந்து பெருமானைச் சரண் அடைவதே.

இப்படி வாழ்பவர்களே இந்த ஸம்ஸாரத்திலிருந்து முக்தி பெறுவர்.

**********************

**ரஜோகுணம் உடையோர்**

- வாழ்க்கையில் பற்று கொண்டு,
- சாஸ்த்ரங்களை மீறி வாழ்ந்து
- ஆசைகள், சுயநலம், உணர்ச்சிகள், இந்திரியசுகம் என்று இவைகளின் பின்னே அலைந்து வ்யாதிகளை அனுபவித்து துன்புறுவர்.

*********************************************************

**தமோகுணம் உடையோர்**

- சாஸ்த்ரங்களை அறவே புறக்கணித்து,
- விபரீத வாழ்க்கை வாழ்ந்து
- நாற்றமாயும் அசுத்தமாயும் உள்ள உணவுகளை உண்டு
- அவ்விதமே அசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து
- பாபங்கள் பல செய்து,
- தன்னையும் கெடுத்துக்கொண்டு,
- மற்றவர்களின் துன்பங்களுக்கும் காரணமாக அமைவர்.

*****************************************************

## திருவாராதனம்



ஸந்த்யாவந்தனம் அவசியம் செய்ய வேண்டும் என்னுமாப் போலே, தினமும் பெருமாள் திருவாராதனமும் அவச்யம் செய்ய வேண்டும்.

### நாம் ஏன் திருவாராதனம் செய்ய வேண்டும்?

பகலும் இரவுமாக மாறி மாறி வந்து நம் ஆயுள்நாளைக் கழியச் செய்கின்றன. இதை நன்கறிந்தும், இவ்வுலக வாழ்வே வாழ்வு என்ற எண்ணத்தில் பணம் உணவு, உடை, வீடு, இவைகளின் பின் அலைந்து, கடவுளின் பால் ஈடுபாடு கொள்ளாமல் வாழக்கூடாது.

எம்பெருமான், எப்படியாவது நம்மைப் பெறவேணு மென்றே பற்பல அவதாரங்களெடுத்துப் படாதன படுகிறான். எம்பெருமான் நமக்கு பல ஜன்மங்களைத் தருவது, ஒரு ஜன்மத்திலில்லாவிட்டாலும் ஒரு ஜன்மத்திலாவது நாம் அவனை அறிந்து, அவனிடம் பக்தி செய்து, அவனைச் சரணடைந்து, அவனுடன் சேரவேண்டும் என்ற விருப்பத்தினாலேயே.

அவன் ஏன் நம்மை அடைய இப்படி ப்ரயத்னப்படுகிறான் என்றால் தன்னை விட்டுப்போன பொருளைத் தேடிபிடிப்பது சொத்துக்கு சொந்தக்காரனின் காரியமல்லவா? அதுபோல பெருமானுடைய சொத்தாகிய நாம் அவனை விட்டுத் தவறியிருக்கும்போது, அவன் நம்மைத் தேடிப்பிடித்து தன்னவனாக ஆக்கிக்கொள்ள முனைவது இயற்கையாதலால் அவன் இப்படி செய்கிறான். இப்படி எம்பெருமானே நன்மையைத் தேடுகிறதற்குக் காரணம் நம்மைப் படைத்த அவனுடைய ரத்த ஸம்பந்தமேயாகும்.

மேலும் தன் புத்திரனது பிரிவையே நினைத்துப் வருந்தும் பெற்றோர்போலே எம்பெருமானும் நம் பிரிவையே நினைத்து வருந்தி, நம்மோடே கலந்து பரிமாறுவதற்காக நம் வீட்டளவும் ஸாளக்ராமமாக வந்து நிற்கிறான்.

இப்படி இருந்தும், 'நம்மிடம் உள்ள சொத்து, சுகம், வாசல் இவைகளிலேயே ஆனந்தப்பட்டு வீடு, எம்பெருமானை நெஞ்சிலும் நினையாதே பணத்தையே தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டு காலத்தை வீணாக்காதீர்கள்.

அப்பெருமானது திருவடிகளிலே நல்ல மலர்களைக் கொண்டு ஸமர்ப்பித்து ஆராதியுங்கள். பகவத் விஷய பக்தியே நீங்கள் ஸமர்ப்பிக்கும் நிகரில்லாத தாமரைப்பூ . அவ்வெம்பெருமான் திருவடிகளில் புஷ்பங்களைப் பணிமாறுவதும் அவனது திருநாமங்களைச் சொல்லி திருவாராதனம் செய்வதுமே நாம் செய்ய வேண்டிய கடமையாகும்.

சிற்றின்பங்களில் ஆழ்ந்து திரிகின்ற சிலர், எம்பெருமானைச் சிந்திப்பதற்கு இப்போது என்ன அவஸரம்? போகப்போகப் பார்த்துக்கொள்வோம் என்று நினைத்திருக்கலாம்; இவ்வுடலின் தன்மை உங்களுக்குத் தெரியாதோ? நமக்கு இன்னமும் நீண்ட ஆயுள் இருக்கின்றதென்று நம்பியிருக்க இடமுண்டோ? இல்லை; ஆதலால் முன்னமே பெருமானின் திருப்பாதங்களைச் சிந்தித்து வாழுங்கள்.

இறைவனுக்கும், மனிதனுக்கும் பாலமாக விளங்கி, இறைவனையும், மனிதனையும் ஒன்றாக இணைத்து மனிதனின் மனத்தில் ஓர் அமைதி ஏற்படுத்துவதே திருவாராதனம்.நம் வாழ்க்கையின் ஏனைய கடமைகளைச் செவ்வனே செய்து முடிக்க இந்த ஆன்மிக நிம்மதி உதவுகின்றது.

*********************************************************